விலை: சதம் 60

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 வைகாசி 31 ஷஃபான் 10 இதழ் 119
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 13-6-1981



இம்மாதம் முதலாம் திகதி ''ஈழநாடு'' அலுவலக கட்டடம் தீக்கிரையானபோது முழு அளவில் சேதமுற்ற இயந்திரங்களில் ஒன்றையும் அடுக்கிவைக்கப்பட்டு எரிக்கப்பட்ட ''ஈழநாடு'' ஊழியர்களின் சைக்கிள், இயக்குநரின் மோட்டார் சைக்கிளையும் இங்கு காணலாம்.

அமிர்தலிங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

32 அரச எம்.பி.க்கள் முன்னறிவித்தல்

[கொழும்பு]

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் மீது பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவருவதற்கு அரசுதரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் முப்பத்துஇரண்டுபேர் அறிவித்தல் கொடுத்துள்ளனர்.

இதுசம்பந்தமான அறிவித்தலை, பாணந்துறை எம். பி. டாக்டர் நெவில்பெர்னாண்டோ, பாராளுமன்ற செயலாளர்நாயகத்திடம் கையளித்துள்ளார்.

இதில் இரண்டு முஸ்லிம் எம். பி.க்கள் உட்பட 32 எம். பிக்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

நிருபர்கள் மாநாடு

திரு.அ. அமிர்தலிங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவது சம்பந்தமாக, பாணந்துறை எம். பி. டாக்டர் நெவில்பெர்னாண்டோ, மாவத்தம எம்.பி. திரு. பிரேமசந்திர, இரத்தினபுரி எம். பி. திரு. புஞ்சிநிலம ஆகியோர் நேற்றுக்காலை பத்திரிகை நிருபர்களைச் சந்தித்து தங்களது நிலை குறித்துவிளக்கினார்கள்.

''மதுரையில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், சென்னையிலுள்ளஇரண்டு முன்னணிப் பத்திரிகைகளுக்கு பேட்டியளித்துள்ளார். ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' [5-1-81] பத்திரிகைக்கும்''தினத்தந்தி'' [17-1-81] பத்திரிகைக்கும் திரு. அமிர்தலிங்கம் அளித்திருந்த பேட்டியில்; இலங்கைக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கொடுத்துள்ளார். இதனை அடிப்படையாகக் கொண்டு, திரு. அமிர்தலிங்கத்துக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர அறிவித்தல் கொடுத்துள்ளோம்'' என்று மேற்படி மூவரும் விளக்கினர்கள். [ம]

அரசு மீது நம்பிக்கையில்லா பிரேரணை முன்னறிவித்தல்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவர எதிர்க்கட்சிகள் முன்னறிவித்தல் கொடுத்துள்ளன.

இது சம்பந்தமான அறிவித்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவை கையெழுத்திட்டுள்ளன.

மின்வெட்டு குறைப்பு

[கொழும்பு]

இதுவரைகாலமும் நாடு முழுவதும் 8 மணித்தியாலம் நீடிக்கப்பட்டிருந்த மின்வெட்டு நேரம் இன்று முதல் நான்கு மணித்தியாலமாக குறைக்கப்பட்டுள்ளது.

கடைசி பஸ் 9-30 க்கு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் இருந்து இரவு பஸ் சேவைகள் நேற்று முதல் வழமை போல் நடைபெறுகின்றது.

இரவு 9-30 மணிக்கு இங்கிருந்து கடைசி பஸ் புறப்படுகிறது.

ஈரானில் பூகம்பம்: 1500 பேர் பலி!

தெஹ்ரான், ஜூன் 12 ஈரானில் ஏற்பட்ட பயங்கர பூகம்பம் காரணமாக 1500 பேர் பலியானார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரானின் ஹேமன் மாகாணத்தில் இடம்பெற்ற இப்பூகம்பத்தில் ஆயிரக்கணக்கானோர் பலியானதாகவும், பெரும் தொகையானோர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பூகம்பத்தினால் சுமார் 1500க்கும்3000பேருக்குமிடையில் பலியாகியிருக்கலாமென ஈரான் பிரதம மந்திரி ஜனாப் முகமட் அலி ரஜாய் தொலைக்காட்சிமூலம் மக்களுக்குவிடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

ஈரானின் நிலப்பரப்பில் மூன்றிலிரண்டு பகுதி இப்பூகம்பத்தினால் பாதிப்புக்குள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

ஈரானின் பெரும் தொகையான மக்கள் வாழும் பகுதியிலேயே இப்பூகம்பம் ஏற்பட்டுள்ளது. [வெ]

'அமிர்' அமெரிக்கா பயணமானார்

[கொழும்பு]

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுக் காலை அமெரிக்கா பயணமானார்.

திரு. அமிர்தலிங்கம் ஜேர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்வார்.

ஹோம் பினான்ஸ்
லிமிட்.
82,கன்னாதிட்டி,(போன்: 8310)யாழ்ப்பாணம்
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000-க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
1981-1-1இல் எம்மிடம் இருந்த வைப்பாளர்
அனைவருக்கும் வைப்பு முடிவு காலத்தில்
3 வீத மேலதிக போனஸ்
எமது லாபத்தில் இருந்து வழங்கப்படும்.
உங்கள் பணத்தை விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி, கொழும்பு-3
தொலைபேசி; 89190

யாழ். வன்செயல்கள்:

12 சிரேஷ்ட பொலிசார்மீது விரைவில் நடவடிக்கை!

[கொழும்பு]

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடந்துள்ள வன்செயல்களில் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் சுமார் 12 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்தில் கோவில்கள், வீடுகள், மோட்டார் சைக்கிள்கள், பொது நூலகம் போன்றவை எரிக்கப்பட்டது கொள்ளையடிக்கப்பட்டது போன்ற வன்செயல்கள் தொடர்பாக இப்பொழுது புலன் விசாரணைகள் நடைபெற்று வருவதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட 200 பொலிசாரின் நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்படுவதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் பொலிசாரின் நடவடிக்கைகள் பாராட்டும்படியாக இருந்துள்ளதென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் 'யோகேஸ்' கூறியது:

'எனக்குச்செய்யநினைத்ததை செய்துவிட்டார்கள்!

யாழ்ப்பாணச் சந் துன் அந்தி பிடல் சம்பவங்களை அந்த தங்களை - அமளிகளை எல்லாம் அடக்குவதற்காக ஆத்திரமும் ஆவேசமும் தொனிக்க பாராளுமன்ற சபையில் கூறி நீதி கோரி முழக்கமெழுப்பினார் திரு அமிர்தலிங்கம் அவ்வளவு கலவரமாக இருக்கவில்லை.

கூச்சலும் குழப்பமும்

வடபகுதி கூச்சல்களும் குழப்பங்களும் சபையில் பெரும் அமளியை ஏற்படுத்திக்கொண்டிருந்தன. ஆனால் பழக்கப்பட்ட இந்நிலைமைகளை சாதுரியமாக எதிர்கொண்டார் கொடுமையான வார்த்தைகளையும் பிரயோகித்தார். வார்த்தைகளில் நிதானமாகவும் இருந்தார்.

சபை ஆரம்பித்த சில நிமிடங்களில் திரு அமிர்தலிங்கம் பேச எழுந்த மாத்திரத்திலேயே சபையில் பலத்த கோஷம் மூண்டது.

பாணந்துறை உறுப்பினர் டாக்டர் நெவில் பெர்னாண்டோ எழுந்து 'ஓர் ஒழுங்குப் பிரச்சினை. வெளிநாட்டார் இங்கு பேசமுடியுமா?' என்றார்

அடுத்த வினாடி பின்புறம் அரசபக்கம் திரும்பி திரு. அமிர்தலிங்கம் 'வீரர் தாய்களைக் கண்டு அஞ்சுங்கள்'' என்றார்! சபையில் உடனேயே ஏற்பட்ட அமளியை கட்டுப்படுத்திய சபாநாயகர் அல் ஹாஜ் பாக்கீர் மாக்கார் எச்சரிக்கையோடு பாணந்துறை உறுப்பினர் தமது கூற்றை வாபஸ்பெறவும் செய்தார்.

ஒருமணி நேரம் பேசினார்

பொதுசன முக்கியத்துவம் வாய்ந்த அவசர விடயம் ஒன்று குறித்து தாம் பிரேரணை ஒன்றை சமர்ப்பிப்பதாகவும் அதற்கு வாய்ப்பாக சபை அலுவல்களை ஒத்திவைக்கும்படியும் கோரினார் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம்.

அரசாங்கத்தின் சில அவசரமான அலுவல்களை நிறைவேற்றியதும் எதிர்க்கட்சித் தலைவரின் பிரச்சினையை சபை எடுக்கலாம் என்றார் பிரதமர் திரு பிரேமதாச.

ஒருமணி நேரத்துக்கு மேல் திரு அமிர்தலிங்கம் யாழ்ப்பாண சம்பவங்களை [illegible] வெளிப்படுத்தினார்.

யாழ்ப்பாணச் சம்பவங்களுக்கு [illegible] பொலிசாரே பொறுப்பு என்று [illegible] சுமத்தினார்

2ம் உலக யுத்தத்தில்

சம்பவங்களை [illegible] 2ம் உலக யுத்தத்தின்போது பிடித்த எதிரிகளாலேயே நூல் நிலையங்கள் [illegible] போது யாழ்ப்பாண நூல் நிலையமும் 'ஈழநாடு' பத்திரிகை நிறுவனமும் நாசமாக்கப்பட்டன. [illegible] ஆண்டுகளுக்கு [illegible] காட்டுமிராண்டிகளும் செய்ய நினைக்காத [illegible] என்றார்!

திரு. அமிர்தலிங்கத்தின் பேச்சில் அடிக்கடி குறுக்கிட்டுக் கொண்டிருந்தவர்கள் பிரதி பிரதான அமைச்சர் திரு புஞ்சிநிலமே பிரதி நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு பியசேன [illegible] திரு புஞ்சிநிலமே [illegible] பார்த்து [illegible] முடிக்கலாம்'' என்று ஆத்திரத்துடனேயே ஒரு கட்டத்தில் கூறியபோது அமிர்தலிங்கம், பின்னர் அக்கூற்றை வாபஸ் பெற்றுவிட்டு, 'உறுப்பினர் [illegible] கொண்டிருந்தது [illegible] பேச்சைக் கேட்டபடி அவரைக் கேட்கிறேன்'' என்றார்!

முழக்கமிட்டு உரைத்த அமிர்தலிங்கம், சபையில் 'சபதம்' ஒன்றும் செய்தார் அரசுக்கு 5 கோரிக்கைகளை விடுத்து அவற்றின் மீது அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்வரை நாம் சபை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளமாட்டோம் என்றார்.

யோகேஸ் குரல்

சபையில் அனைவரது கவனத்தையும் ஈர்த்து, அமைதியின் மத்தியில், வழக்கத்துக்கு மாறான ஓர் அமைதியான தொனியில் ஒலித்தது யாழ்ப்பாணத்து இளம் உறுப்பினர் திரு வெ யோகேஸ்வரனின் குரல் அமைதியான அக்குரலின் கூடவே ஆணித்தரமும் தொனித்தது!

"எனது மறைவு குறித்த அநுதாபத் தீர்மானம் தான் இன்று இச்சபையில் இடம்பெறுமென எண்ணினேன்: ஆனால் கடவுள் செயலாக நானே இன்று இங்கு பேசுகின்றேன்!" என்று சபையை உள்ளத்தையும் தொட்டுவிடும்படி கூறிய அவர். "படிக்க வேண்டிய பாடத்தைப் படிச்சாயிற்று எனக்குச் செய்ய நினைத்த ஒன்றைச் செய்து முடித்தாயிற்று அடுத்தது என்ன என்பதை நான் அறிவேன் ஆனால் அனைத்துக்கும் நான் தயார் எமது இலட்சியத்துக்கான எமது நடவடிக்கைகளை எந்த சக்தியாலும் எக்கட்டத்திலும் அழித்துவிட முடியாது'' என்று கூறிமுடித்தார்.

-மாலி-

திரு யோகேஸ்வரனின் பேச்சிலும்கூட கூச்சல் குறுக்கிட்டது "நீங்கள் இங்கு சிரியுங்கள்; ஆனால் உலகம் உங்களைப் பார்த்துச் சிரிக்கிறது'' என்றார் யோகேஸ்வரன்

அரசு பின்வரிசை உறுப்பினர்களின் சரமாரியான கூச்சலுடன் தனது பேச்சை ஆரம்பித்த தொழில் [illegible] அலுவல்கள் அமைச்சர் திரு சிறில் மத்தியூ நீண்டநேரம் உரை நிகழ்த்தினார். திரு. அமிர்தலிங்கம், திரு சிவசிதம்பரம் ஆகியோரோடு திரு ராமலிங்கமும் அவரின் பேச்சினிடையே தாக்கமாகக் குறுக்கிட்டனர். பலதடவைகளில் ஒழுங்குப் பிரச்சினைகளைக் கிளப்பிக்கொண்டிருந்தார் திரு சப்பர்தன

தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் பயங்கரவாத இயக்கத்துக்குமுள்ள தொடர்பை தாம் விளக்குவதாகக்கூறி உரை நிகழ்த்தினார் திரு. மத்தியூ

இரவு 8 மணிக்கு 4 நிமிடங்கள் இருந்தபோது, அமைச்சரை இடைமறித்து கடுங்கோபத்துடன் எழுந்த நல்லூர் உறுப்பினர் திரு சிவசிதம்பரம் 'காஜனைய' எவராலும் அப்போது [illegible] இயம்பிவிடலாம்! சபையில் எழுந்த கூச்சலைப் பொருட்படுத்தாது இடைவிடாது பேசிக்கொண்டு நின்றார் அவர் 'அமைச்சரின் கூற்று அத்தனையையும் நாம் திட்டவட்டமாக மறுக்கிறோம் அவரின் கூற்றுக்கள் அனைத்தையும் நாம் நிர்மூலமாக்குவோம் எனது அலுவலகத்திலேயே ஒருவர் சுடப்பட்டுக் கொல்லப்பட்டார் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு இல்லை ....'' என இப்படி அவர் கூற அமர, 30 வினாடியின் பின் எழுந்த அமிர்தலிங்கம் பின்னர் தொடர்ந்து அமைச்சரின் கூற்று அத்தனையையும் நாம் முறியடிப்போம் என்றார் அவர் அவரோடு மீண்டும் திரு சிவசிதம்பரமும் எழுந்தார் [illegible] மாட்டேன் [illegible] சிக்கொண்டிருக்க படைக்கலச் சேவிதர் திரு. ஞானி அபேசிறி சபை ஒத்திவைக்கப்பட்ட செங்கோலைத் தாங்கிச்சென்றுவிட்டார் பரபரப்பான அந்த நிலைமையின் [illegible] தப் பியோகங்களுடன் [illegible] வெளியே நின்றுகொண்டிருந்தார்கள் (ம)

"இராணுவ சிப்பாய் பீரிஸ்தான் சுட்டார் என்று அறிந்தேன்"

பாலசோதி மரணவிசாரணையில் ராணுவமேஜர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

''நல்லூர் எம். பி. வீட்டுக்கு அண்மையில் சந்தேகநபரான இராணுவச்சிப்பாய் பீரிஸ் சென்ற வானுக்கு ஒரு தடவை துப்பாக்கியால் சுடப்பட்டபோது சுடப்பட்ட இடத்தை நோக்கி இரண்டு தடவைகள் சுட்டதாக வானொலி சமிக்ஞை கருவி மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டது அதுபற்றிய விசாரணையின் பின்னர் சந்தேகநபரான பீரிஸே அடாது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக அறிந்துகொண்டேன்''

இவ்வாறு யாழ். நகரப்பாதுகாப்புக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்த இராணுவ மேஜர் கொட்டேகொடுவ நல்லூர் எம். பி யின் அலுவலகத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இளைஞரின் மரண விசாரணையில் சாட்சியமளிக்கையில் கூறினார்

யாழ் நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின்போது மேஜர் கொட்டேகொடுவ சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது!

''ஜூன் மாதம் 3ம் திகதி இரவு பிரிகேடியர் வீரதுங்காவின் வான் ரோந்தாகச் சென்றபோது அந்த வானை நோக்கி சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அண்மையில் துப்பாக்கியால் சுடப்பட்டது வானில் பிரிகேடியர் இல்லை நான் இருந்தேன் மேஜர் வணசிங்கவும் இருந்தார் எமது வானுக்கு சேதம் ஏற்படவில்லை

''அதே இரவு 12-45 மணியளவில் அவ்வழியே சென்ற இராணுவ வானை நோக்கி சம்பவம் நடைபெற்ற இடத்தில் துப்பாக்கியால் சுடப்பட்டதாகவும் அதனை அடுத்து தாம் இரண்டு தடவைகள் துப்பாக்கியால் சுட்டதாகவும் தமது வானுக்கோ ஆட்களுக்கோ காயம் ஏற்படவில்லை என்றும் வானொலி சமிக்ஞை கருவி மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டது

''அடுத்து நான் நடத்திய விசாரணையின்போது சிப்பாய் பீரிஸ்தான் துப்பாக்கியால் சுட்டார் என அறிந்து கொண்டேன். பின்னர் இது பற்றி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு எம். எஸ் நடராஜாவிடம் தெரிவித்து துப்பாக்கியையும் ஒப்படைத்துவிட்டு பீரிஸ் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார்.

யாழ் பாதுகாப்புக்கு பொறுப்பு

யாழ் நிலைமை சீரில்லாத காரணத்தினால் இம்மாதம் 1ம் திகதி பிரிகேடியர் வீரதுங்க யாழ். அரசாங்க அதிபருடன் விசாரணை நடத்திய பின்னர் யாழ் நகரைப் பாதுகாக்கும்படி எனக்குப் பணிக்கப்பட்டது

உரும்பராயில் இயந்திரத் துப்பாக்கிச்சூடு

1 திகதி அதிகாலை லாலி இராணுவ முகாமிலிருந்து யாழ் கச்சேரிக்கு வந்தபோது உரும்பராய் தபால் கந்தோருக்கு அண்மையில் எமது வானை நோக்கி இயந்திரத் துப்பாக்கியால் சுடப்பட்டது 2 இயந்திரத் துப்பாக்கிகளால் எம்மை நோக்கி சுடப்பட்டதாக விசாரணையின்போது புலனாகியது

3ம் திகதி இரவு மருதனார்மடத்தில் விவசாயக் கந்தோர் வானத்தை நோக்கி சுட்டதாகவும் எமக்கு தெரிவிக்கப்பட்டது

விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (இ)

யாழ். மாவட்டத்திலிருந்து

ஆயுதப் படை சேவை வாபஸ்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்திலிருந்து ஆயுதப்படைகளின் சேவை வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இதுதொடர்பான ஜனாதிபதியின் அறிக்கையை சபாநாயகர் அல் ஹாஜ் பாக்கீர் மாக்கார் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்காகவே அங்கு இராணுவம், விமானப்படை, கடற்படை ஆகிய மூன்று படைகளும் அனுப்பிவைக்கப்பட்டதாக அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரந்தனில்

உழவு இயந்திரப் பயிற்சி

(கொழும்பு)

பரந்தனில் வருடாந்தம் அறுபது பேருக்கு உழவு இயந்திரப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது.

இதற்கான பயிற்சி வகுப்புகளை கிறிஸ்தவ இளைஞர் சங்கம் நடாத்தவுள்ளது

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சுன்னாகம் கொத்தியவத்தை காலஞ்சென்ற தம்பு பேரின்பநாயகம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தில் விடயத்தில்

மரணமெய்தியவர்

அம்புக்குட்டி தம்பு கொத்தியவத்தை, சுன்னாகம்

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல 91

எதிர்

1, தம்பு பெண் சிவக்கொழுந்து
2. பேரின்பநாயகம் கைம்பெண் அன்னலட்சுமி-

இருவரும் கொத்தியவத்தை சுன்னாகம்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க அதில் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு ஆனி மாதம் 2-ஆம் நாளன்று முற்பகல் 9.00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாகப் படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
பதிவாளர்
மூ. நல்லலிங்கம்

1981-ம் ஆண்டு சித்திரை மாதம் 23-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னால் எழுதப்பட்டது
செ. இராமலிங்கம்
மனுதாரரின் சட்டத்தரணி

0009

ரூ. 3 லட்சம் லாபம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துறைமுகத் தொழிலாளர் கூட்டுறவுச் சேவைச் சமாசம் லொறி சேவை மூலம் 3 லட்சம் ரூபாவினை இலாபமாகப் பெற்றுள்ளது

இச்சமாசம் மேற்படி சேவைக்கென மேலும் ஒரு புதிய லொறியை வாங்கியுள்ளது.

சினிமாகாட்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து கடந்த சிலநாட்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சினிமா காட்சிகள் அவசரகாலச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டதை அடுத்து வழமைபோல் காண்பிக்கப்பட்டன (கி-கு.

கணவாய் ஆய்வு உத்தியோகத்தர் நியமிக்கவும்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடலட்டை ஆய்வு உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தது போல் கணவாய் ஆய்வு உத்தியோகத்தர் ஒருவரையும் நியமிக்க உடன் நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு இலங்கை கடல் தொழில் விருத்தி மதிப்புரைச் சபையை மன்னார் உறுப்பினரான ஜனாப் எஸ். எம். [illegible] கேட்டுள்ளார்.

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் பிறவுண் வீதி காலஞ்சென்ற எஸ். குமாரசாமி பெண் அழகரத்தினத்தின் மரணசாதனமெழுதாச் சொத்துக்களுக்கு நிர்வாகத் தத்துவம் பெறும் விடயத்தில்

மரணமெய்தியவர்)

மரணத் தத்துவ
வழக்கு இல. 3595/T

செல்லப்பா குமாரசாமி,
இல 4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனமில்லாத் தத்துவ வழக்கு மேலே குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1981ம் ஆண்டு ஆனி மாதம் 19ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாகப் படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1981ம் ஆண்டு சித்திரை மாதம் 21 திகதி.

நீதிமன்ற ஆணைப்படி
பொ. சின்னத்துரை
பதிவாளர்.

தயாரித்தவர்
க. செ. சோமசேகரம்
மனுதாரரின் சட்டத்தரணி.

0010

மணிவாக்கு

எவர் எது சொன்னாலும் கேட்டுக்கொள்; உனக்குச் சரியென்று தோன்றுவதைச் செய்.

—காந்தியடிகள்

நமது நோக்கு

யாழ்ப்பாண பொதுஜன நூலகம்

எல்லா நாடுகளிலும் கல்விக்குப் பெருமை அதிகம் ஆனால் எங்கள் பழைய தமிழ் நூல்களில் கல்விக்குக் கொடுக்கப்பட்ட தனிப் பெருமை மிக மிக அதிகம்!

கல்வியில்லாதவர்களை விலங்காகவே வைத்தார்கள் தமிழ்மக்கள். நாற்கால் விலங்கிய மிருகத்துக்கும் மனிதனுக்கும் எத்தனை தூரம், அத்தனை தூரம் உண்டு கல்லாதார்க்கும் கல்வியுள்ளவர்களுக்கும்.

இந்த உண்மையைக் கருதிற்கொண்டால் இம்மாதம் முதலாம் திகதி இரவு தீக்கிரையான யாழ்ப்பாண பொதுஜன நூலகம் எத்தகையவரால் தாக்கப்பட்டதென்பது தெளிவாகும். இவ்வித அநாகரிக நிகழ்ச்சி இக்காலவரலாற்றில் இடம் பெறுதொன்றாகும்;

அமரர் செல்லப்பா போன்ற இந்நாட்டின் பரோபகாரிகளின் தொடக்கம் யாழ்ப்பாணம் பெற்றெடுக்காத அருந்தவப் புதல்வன் வணக்கத்துக்குரிய லோங் சுவாமிகள் (Very Rev. Fr. T. M. F. Long வரைக்கும் அரைநூற்றாண்டு காலத்தில் கட்டி எழுப்பிய கலைக் கோவில் இது. அன்றிரவு இவ்வடிவில் காவல்புரியும் சுவாமியின் ஆன்மா எந்நிலையில் இருந்ததோ!

அரிய பெரிய இலங்கை நூல்கள் மட்டுமல்ல மேற்கில் வளரும் புத்தம் புதிய கலைகளில் வெளியாகும் பல்லாயிரக் கணக்கான நூல்களைக் கொண்டதும், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த திவ்விய ஆலயம் இது. இதற்குப் புத்துயிர் அளிக்க உலகநாடுகள் பல திரளுமென்பது திண்ணம்.

உயர்கல்விக்கு வசதிகள் மறுக்கப்பட்டுத் தத்தளிக்கும் தலைமை பெற்ற ஆயிரக்கணக்கான தமிழ்மாணவர்களின் புகலிடம் இது. பூரண மனிதனுக்கு உதவும் வாசிக்கலுக்குரிய நூலகம் மட்டுமல்ல

'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்'

என்பதற்கமைய கல்வியைவிட கேள்விக்கும் உதவும் நிலையமாக அருஞ் சேவை செய்துவந்திருக்கிறது. தானேபடித்தறிந்த அறிவில் குற்றங்கள் புகுந்திருக்கலாம். கேள்வியில் அதுகிடையாது. அது இருமுறைவடிகட்டிய அறிவு.

எனவே யாழ். நூலகத்தின் இன்னொரு முக்கிய சாதனமாக இயங்கிவந்தது கேட்போர் நிலையம். இவ்விரண்டு அங்கங்களையும் உயிர்பிக்கும் பொறுப்பு யாழ் மாவட்ட மக்களினதும், சிறப்பாக யாழ். மாநகர சபையினதும் அவசியமானதும் அவசரமானதுமாகும்.

உலகின் மிகப்பெரிய மேதாவிகள், கார்ல் மார்க்ஸ், பேரறிஞர் ஷா, சேர்விஸ்டன் சேர்ச்சில் போன்றவர்கள் பலகலைக் கழகத்தின் பட்டதாரிகளல்லர். இப்பெரியோருக்கு கல்விபுகட்டியது லண்டன் பொருட்காட்சி நூல்நிலையம் (British Museum) என்றால் ஒரு நூலகத்தின் பெருமை, வலிமை எத்தகையதென்பதை எடுத்துரைக்க முடியுமா?

யாழ் மாவட்டத்தின் அபிவிருத்தி இந்நூலகத்தில் பெரிதும் தங்கியிருப்பதால் காலம் தாழ்த்தாமல் எவ்விதகட்சி அரசியலுக்கும், திருவாளப்போட்டி பொறாமைக்கும் அப்பால் இயங்கிவந்த இந்த அறிவுமதத ஸ்தாபனம்- இப்பகுதி மக்களின் கண்கண்டதெய்வம்- உயிர்த்தெழுந்து, ஆலபோல் தழைத்து, அறுகுபோல் வேரூன்ற துரிதமான நடவடிக்கைகளில் இறங்கு[illegible]!

சபை உறுப்பினர்கள் சமர்ப்பித்த 'திட்டங்கள்குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்" – யாழ். மேயர்

(யாழ்ப்பாணம்)

"யாழ் நகரை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம். சபை உறுப்பினர்கள் சமர்ப்பித்த அபிவிருத்தித் திட்டங்கள் ஒவ்வொன்று குறித்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது உறுப்பினர்கள் சமர்ப்பித்த எந்தத் திட்டத்தையும் நான் தட்டிக்கழிக்கவில்லை."

"திட்டங்களைச் சமர்ப்பிப்பது என் கடமை. அதனைச் செய்வதும் விடுவதும் முதல்வரைப் பொறுத்தது" என்று மாநகரசபையில் உறுப்பினர் திரு. எஸ். தயாபரராசா தெரிவித்தது பற்றி யாழ் மாநகர முதல்வர் திரு. இராசா விசுவநாதனிடம் கேட்டபோது மேற்கண்டவாறு கூறினார்.

3 வீதிகள் திறக்கப்படும்

முதல்வர் திரு. இராசா விசுவநாதன் மேலும் கூறியதாவது: மூன்று புதிய வீதிகளைத் திறக்கும்படி கேட்டிருந்தார். இது பற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

வண்ணான் குளத்தை மூட ஆட்சேபம்

"வண்ணான்குளத்தை நிரப்பி, நவீன பஸ்நிலையம் அமைக்கவேண்டும் என்பது அவரின் மற்றொரு கோரிக்கை. இதுபற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டது.

வண்ணான் குளத்தை மூடுவதற்கு நீர்ப்பாசன சபை கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது வண்ணான்குளத்தை மூடுவது பற்றிய அபிவிருத்தி இலாகாவின் அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை.

மின் இயந்திர விவகாரம்

"யாழ் நகருக்கு மின்இயந்திரம் வாங்கவேண்டுமென்ற கோரிக்கை மின்சார குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, நிதிக்குழுவிற்கு அனுப்புவதென்று முடிவுசெய்யப்பட்டது ஆனால் இவ்விடயம் நிதிக்குழுவிற்கு இன்னும் வரவில்லை.

மின் இயந்திரம் விற்கப்பட்டது.

"1947-ம் ஆண்டுக்கு முன்னர் பெரிய மின் இயந்திரம் ஒன்று மாநகரசபைக்குச் சொந்தமாக இருந்தது அது நீண்டகாலமாகப் பாவிக்கப்படாமலிருந்ததால், அதனை முன்னாள் மேயர் திரு. ரி. எம். துரைராஜா காலத்தில விற்கப்பட்டது

3-ம் கட்ட நவீன மார்க்கட்

'பெரியகடை வலயத்தில் மூன்றாம் கட்ட நவீன மார்க்கட் அமைப்பு மற்றொரு திட்டமாகும். இதற்கு 60 லட்சம் ரூபாவும், குருநகரில் அமைக்கப்படும் மார்க்கட்டிற்கு 20 லட்சம் ரூபாவும் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. இது பற்றி நடவடிக்கை எடுத்து வருகிறோம். இதற்கான நிதி பெறுவது பற்றி ஆராய்ந்து வருகிறோம். இவற்றை நாம் தட்டிக் கழிக்கவில்லை." (ஈ)

அன்று நடந்தது இன்று நடப்பது

நடந்து போன தேர்தலை மறந்து விடுங்கள்

வேட்பாளருக்கு நீதவான் புத்திமதி

தேர்தலுக்கு முன்னும் தேர்தலின் போதும் தேர்தலின் பின்பும் பலவித அசம்பாவிதங்கள் நிகழ்வதுண்டு.

1931-ஆம் ஆண்டு காலிப் பகுதியில் வெலிகம ஸ்தானத்திற்குப் போட்டி போட்டு தோல்வியுற்றவர் தான் திரு. சேனரத்ன

இவரது மாமன் சமரசிங்க என்பவர் வெற்றி பெற்ற வேட்பாளர் திரு வணிகசேகர என்பவரை ஆதரித்து அபிமானித்தவர் ஆதலால் மாமனாரைப் பயமுறுத்தியதாய் அவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டது.

இதனை விசாரித்த நீதவான் பிந்தா அவர்கள், வழக்காளியின் ஆலோசனைப்படி குற்றவாளியை மாமனிடம் மன்னிப்புக் கேட்குமபடி கட்டளையிட்டார். அவ்வாறே மன்னிப்பும் கேட்கப்பட்டு சமாதானம் செய்யப்பட்டது.

குற்றவாளியிடம் நீதவான் பின்வருமாறு நற்புத்தி கூறினார்

★ இனிமேலாவது அரசாங்க சபையில் ஸ்தானம் பெற நீர் விரும்பி வெற்றி பெற வேண்டுமென விரும்பினால் நற்குண சீலராக ஒழுகவேண்டும்.

★ இனிமேலாக நீங்கள் நடந்துபோன தேர்தல் வைபவங்களை மறந்துவிடுங்கள்"

—வி கே. நவசோதி

கண்ணீர்க் கதைகள்

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு கண்ணீர்க் கதை இருக்கும்போலத் தெரிகிறது.

யாழ். நகரைச் சுற்றி வந்தால் இந்தக் கதைகளின் தொடர்ச்சிகள் நீண்டுகொண்டே போகும்.

"நல்லதோர் வீணை செய்தே அதை நலம் கெடப் புழுதியில் எறிவதுண்டோ சொல்லடி சிவசக்தி?

உடைபட்ட பல கட்டடங்களின் உள்ளே உடைபட்டு நெரிபட்டுக் கிடக்கும் நெஞ்சங்களின் அவலக்குரல்கள், அழுகுரல்கள், ஏக்கப் பெருமூச்சுக்கள் கண்ணீரால் கதைகளைச் சொல்கின்றன

"அன்றாடு உழைத்துப் பிழைத்தோம். இப்போது?"

"எத்தனை ஆயிரம் முதல் விட்டோமே [illegible]?"

"இனி என்ன செய்வது?"

இப்படிப் பல கேள்விகள், அல்லது குழப்பமான கேள்விகள்.

பூவாய் மலர்ந்து கிடந்த வாழ்க்கைகள் புழுதியில் கருகிச் சிதைந்து கிடக்கின்றன.

வேரூன்றித் தழைத்து வளர்ந்த மரங்கள் வேதனையில் வெம்மையில் வெதும்பிக் கருகிச் சின்னாபின்னமாகிக் கிடக்கின்றன.

யாழ். நகரத்தில் (காதடைத்துக் கொண்டிருந்த ஒலி) ஒரு இசை சங்கமிக்கும் காற்றோடு கலந்து வரும். இடைத்தெருப் பேய்க்காற்றில் கலை இழந்த முகாரி ராகம். அங்கங்கே அவலக்குரல்களின் சுமைதோய்ந்த சோக சங்கீதம்.

நாளைக்கு என்ன நடக்கப் போகிறதோ? என்ற கேள்வி இன்னும் பலரது மனங்களிலிருந்து முற்றாக மறைந்துவிடவில்லை.

சுதந்திர ஜனநாயக நாட்டில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்

செய்யாத குற்றங்களுக்கு ஏனித்த தண்டனைகள்?

குடிமனைகள் எரிக்கப்பட்டபோது அதனுள் கட்டப்பட்டிருந்த கால்நடைகளும் கருகிவிட்டன.

பாறை பிளந்து பயிர்செய்வான் என் தோழன் தமது ஊர்க்கவி மகாகவி எழுதிய பாடலொன்று இப்படி வருகிறது

யாழ்நகர நவீன சந்தையினுள் ஒரு அழகான பூந்தோட்டமிருந்தது அப்போது அது

(5-ம் பக்கம் பார்க்க

மக்கள் கருத்து

'ஈழநாடு' வளர்ச்சிக்கு உதவுவோம்

காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு கனிவு தரும் நல்ல பாட்டு' என்பது எம் கவிஞர் ஒருவரின் திருவாய்ப்பாட்டு ஆனால் எம் 'ஈழநாடு' தினசரி எம் நாட்டின் செய்தியை காலை எழுந்தவுடன் கனகச்சிதமாக தமிழ்பேசும் மக்களுக்கு சுடச்சுட கருத்தமாக இதுவரை காலமும் கொடுத்து வந்ததை மறுக்கவோ மறைக்கவோ எவராலும் முடியாது ஆனால் காத்திராப் பிரகாரமாக ஏற்பட்டுவிட்ட சூழ்நிலையால் 'ஈழநாடு' இதழ் தற்போது மிகவும் குறைந்த பக்கங்களுடன் வெளிவருகிறது.

மேலும் எமக்கு முன்போன்ற நற்சேவையை அளிப்பதற்கு வாசகர்களாகிய நாமும் நல் உள்ளம் படைத்த பற்று மிக்க தனவந்தர்களும் மீண்டும் எம் தினசரிச் செய்தியாகிய 'ஈழநாடு' இதழை நல்முறையில் வர உதவ வேண்டாமா? தமிழ்பேசும்மக்களின் தினசரிச் செய்தியின் தாகத்தைத்தீர்க்க நமது நாட்டின் மூலை வளத்தைப்பெருக்க ஈழநாட்டை நாம் ஆதரிக்கவேண்டும். ஒவ்வொரு தமிழ்மகனும் 'ஈழநாடு' இதழ்களை வாங்கிப் படிப்பதன் மூலமே இதன் வளர்ச்சிக்கு உதவமுடியும்

— க. சி. இராஜேஸ்வரன்
ஆடியபாதம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்

இருபெரும் தேசிய வீரர்கள்

அஞ்சலி [1]

எமது பத்திரிகைக்கு நேர்ந்த இடர் காரணமாக நாட்டின் இரு பெரும் தேசிய வீரர்களுக்கு அஞ்சலி செய்ய வேண்டிய கடமையில் தவறிவிட்டோம். இதற்காக வாசகர்களின் மன்னிப்பைக் கோருகின்றோம்.

– ஆர்.

தேசிய வீரர்

ரீ. பி. ஜாயா

முஸ்லிம் கல்வியின் முதுபெரும் முன்னோடி

அமரர் ரீ. பி. ஜாயா அவர்களுக்கு அஞ்சலி செலுத்து முகமாக அண்மையில் வெளியிட்ட முத்திரை வைபவம் இலங்கைவாழ் மக்கள் அனைவரும் பாராட்டவேண்டிய சம்பவம்.

முஸ்லிம் பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, தமிழ் சிங்களப்பிள்ளைகளுக்கும் கல்வியூட்ட அவர் கையாண்ட அரும்பெருஞ் சாதனைகளை என்றும் நாட்டின் பரபலம்பெற்ற ஸகிராக் கல்லூரி நினைவூட்டும்

குறிப்பாக பல வசதியற்ற தமிழ் மாணவர்கள் கொழும்பில் கல்விகற்க முடிந்ததென்றால் அப்பெரியாரின் பரந்த மனப்பான்மையும் கல்வியில் உள்ள அபிமானமுமே அடிப்படைக் காரணமாகும்

தமது சமூகத்தின் பெருமதிப்பைப்பெற்றும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்குழைத்ததன் பயனாக, அரசாங்க சபையில் மட்டுமல்ல, அமைச்சரவையிலும் இடம்பெற்று தேசியரீதியில் பெரும் பணியாற்றினார்

அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவராகப் பல ஆண்டுகளாகப் பணிபுரிந்த அமரர் ஜாயா இந்நாட்டின் சரித்திரத்தில் அழியா இடம் பெற்றுள்ளார்,

அஞ்சலி [2]

சோஷலிச சித்தாந்தத்தின் சிற்பி

டாக்டர்

என்.எம். பெரேரா

தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்க வேண்டுமென்று போராடி, அக்கொள்கையில் அசையாத நம்பிக்கை கொண்டு, ஆசியைக் கைப்பற்றும் வாய்ப்பு டாக்டர் பெரேராவுக்கு 1960ம் ஆண்டு நிலவியது. தமிழ்மக்களின் பெருமதிப்புப் பெற்ற காலம் அது

ஆனால் தேர்ப்குதி வகுப்புவாதம், முதலாளித்துவ போதிய ஆதரவு அளிக்கத் தவறியதால ஒரு சோஷலிச அரசாங்கம் இந்நாட்டில இடம் பெற முடியவில்லை. நாட்டின் சரித்திரமே இன்று எவ்வாறு இருந்திருக்குமென்று நிபுணர்கள் யூகிக்கமுடியும்.

காலமாற்றத்தால் கொள்கையைத் தளர்த்தி, தமிழ் மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் திறமையுள்ள அரசியல் ஞானி டாக்டர் பெரேரா திசை திரும்பிய சம்பவம் நாட்டின் தரக்குறைவை நினைவுபடுத்துகின்றது.

இந்நாட்டில் தொழிற்சங்க இயக்கம், பொருளாதார சுபிட்சம், சமத்துவ அரசியல் சமுதாய வாழ்வு போன்ற உன்னத இலட்சியங்களுக்கு அல்லும் பகலும் உழைத்த அமரர் டாக்டர் பெரேரா, ஓர் சர்வதேச புகழ்பெற்ற பொருளாதார நிபுணர்.

ஏழைமக்கள் இந்நாட்டில் தலைநிமிர்ந்த அடிகோலிய சிற்பிகளில் முதலிடம் வகிப்பவர் டாக்டர் பெரேரா.

இன்று நாட்டைக் கெடுக்கும் இனவெறிபிடித்த சில தலைவர்கள் போலல்லாமல் தேசிய ஒற்றுமையில் பூரண நம்பிக்கைகொண்ட டாக்டர் பெரேரா சமஷ்டி லட்சியங்கள் வெற்றிபெறும் சூழ்நிலை நாட்டில் உருவாகவில்லை என்ற மன உணர்வுடன் உயிர் நீத்த பெரியார்.

எழுத்தாளர் கவனத்துக்கு

தரமான சிறுகதைகள் கவிதைகள் - கட்டுரைகள், குறுநாவல்கள்- நாவல்கள் - காவியங்கள், சுவையான சம்பவங்கள்- எழுத்தாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன

ஆசிரியர்,
வாரமலர், ஈழநாடு
த. பெ. 49,
யாழ்ப்பாணம்.

யாழ். நூலக எஞ்சிய நூல்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பொதுசன நூல் நிலையத்தில் எஞ்சிக் கிடந்த சொற்பமான நூல்கள் யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. சே. சிவஞானத்தால் சேகரிக்கப்பட்டு நகரமண்டபத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. பொதுசன நூல் நிலையம் முற்றாக மூடப்பட்டுக் கிடக்கிறது.

பொதுசன நூல் நிலையக்கட்டடத்தில் பெரும்பகுதி திருத்தியமைக்கப்பட வேண்டியிருப்பதால் இதற்கு ரூபா 15 லட்சம் செலவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பல தரப்பட்ட நிலவரங்கள் குறித்து யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் சகல நிலையக் குழுக்களும் ஆராய்ந்தன.

யாழ். நூலகத்தில் இருந்து நூல்களை இரவலாக பெற்ற வாசகர் தற்காலிகமாக அந்நூல்களை வைத்திருக்குமாறும் நூலகப் பொறுப்பாளர் அறிவித்தல் விடுக்கும் பொழுது அந்நூல்களை கொண்டுவந்து தருமாறு அலுவலர் ஒருவர் தெரிவித்தார். (ஜ)

நியமனம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபன விற்பனைப் பொதுமுகாமையாளராக திரு இ. சாதுசிகாமணி பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கடந்த 31 வருடகாலமாக இங்கு கடமையாற்றி வருகின்றார். (மா)

யாழ். நகரில் ஐஸ் தொழிற்சாலை

(யாழ்ப்பாணம்)

நாளொன்றுக்கு 10 தொன் ஐஸ் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையொன்றினை வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் யாழ்ப்பாணத்தில் நிறுவவுள்ளது.

இதற்கான இயந்திர சாதனங்கள் யாவும் வந்து சேர்ந்துள்ளன. தொழிற்சாலைக்கான கட்டிட வேலைகள் பூர்த்தியடையும் நிலையிலுள்ளது.

கட்டிட வேலைகள் பூர்த்தியானதும் இந்திய நிபுணர்கள் இத்தொழிற்சாலையில் இயந்திரங்களை இணைப்பதற்காக இங்கு வருவார்கள்.

கூட்டுறவு டிப்பிளோமா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கூட்டுறவுக் கல்லூரியில் கூட்டுறவு டிப்ளோமா பயிற்சி ஆரம்பிக்கப்படவிருக்கிறது

கூட்டுறவு கணக்கியல் கூட்டுறவு முகாமை ஆகிய பாடங்களைக் கொண்டதாக மேற்படி பயிற்சி அமையும்.

இவ்வருடம் ஜூலை 6-ந் திகதி தொடக்கம் டிசம்பர் 24-ந் திகதி வரை இப்பயிற்சி நடைபெறும்.

ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபையின் யாழ் மாவட்ட செயலாளரிடம் இதற்கான விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இம் மாதம் 20-ந் திகதிக்கிடையில் விண்ணப்பங்கள் செயலாளருக்கு அனுப்பப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

அரசு அனுமதி

(மன்னார்)

இலங்கையில் சேகரிக்கப்படும் சங்குகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான அனுமதியை அரசு வழங்கியிருக்கிறது.

கூட்டுறவுச் சங்கங்களும், தனிப்பட்டவர்களும் சங்கு ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து மன்னார் மாவட்டத்தில் ஏற்கெனவே சேகரிக்கப்பட்டுள்ள சங்குகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதுடன் சங்கு குளிப்போரும் அதிக இலாபம் பெற்றுவருகின்றனர். (ஓ)

புத்தம் புதிய பாலின் அத்தனை சிறப்பும்...

பெயார் பிராண்ட், குடும்பத் தேவைகளுக்குகந்த மிகச் சிறந்த முழு ஆடை கொண்ட பால் மா. உங்கள் குழந்தைகள் செழிப்புடன் வளர பெயார் பிராண்ட் பால் மா.

உலகின் உயர்ந்த பால்பண்ணைகளில் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டு, மிகக் கடுமையான தரக்கட்டுப்பாட்டின் கீழ், புத்தம் புதிதாக இருக்கும் வண்ணம் உலோகத்தாளில் அடைக்கப்பட்டுள்ளது. உங்கள் பணத்திற்கு அதிசிறந்த பெறுமதி பெயார் பிராண்ட்.

சுகத்தையும் அதேவேளை செலவுபற்றியும் சிந்திக்கும் குடும்பங்களுக்கு மிகப் பொருத்தமானது.

தேநீர், காப்பி அல்லது ஐஸ்கிறீம், இனிப்பு வகை தயாரிக்க முழு ஆடை கொண்ட பெயார் பிராண்ட் பால் மாவைப் பாவியுங்கள். விரும்பினால் தேங்காய்ப் பாலுக்குப் பதிலாக இதனை சமையலுக்கும் பயன்படுத்தலாம்.

BEAR BRAND
BEAR BRAND
400 கிறும் ரூ. 18/50

பெயார் பிராண்ட்

பெயார் பிராண்ட் முழு ஆடைப் பால்மா
உங்கள் பணத்திற்கு அதி சிறந்த பெறுமதி.

Grant. K & E 39R4

பானிசதாரிடமிருந்து

முப்படைத் தளபதி பதவி பறித்தெடுக்கப்பட்டது

தெஹ்ரான், ஜூன் 12

ஈரானிய ஜனாதிபதி ஜனாப் பானிசதாரை முப்படைகளின் பிரதம தளபதி பதவியிலிருந்து புரட்சித் தலைவர் அயத்தொலா கொமெய்னி விலக்கியுள்ளார்.

ஜனாதிபதி பானிசதாரின் அண்மைக்கால நடவடிக்கைகள் காரணமாக அவருக்கும் புரட்சித் தலைவர் அயத்தொல்லா கொமெய்னிக்குமிடையேயான உறவில் நெருக்கடி தோன்றியதை அடுத்தே ஜனாதிபதி சதாரி மேற்படி பதவியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்.

கண்ணீர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கருகிச் சிதைந்து கிடக்கின்றது. சோலை பாலைவனமாகிவிட்டது.

பொதுசன நூல்நிலையம் அதில் தேடமுடியாத பல புத்தகங்கள் தேங்கிக்கிடந்தன. இனி அவற்றைத் தேடவே முடியாது.

கல்வி வெந்தணலால் வேகாது என்பார்கள். அது சுத்தப்பொய் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

77ம் வருடத்திலிருந்து நமது இளைஞர்களில் எத்தனைபேர் போய்விட்டார்கள்? வெளிநாடுகளுக்கல்ல இந்த உலகத்தைவிட்டே.

நமது தலைவர்கள் கணக்கெடுத்துப் பார்க்கட்டும்.

சம்பவங்களில் யாழ்ப்பாணத்தில் உடைந்த உள்ளங்களின் சோகக்கதைகள் ஆயிரம் ஆயிரம் எழுதலாம்.

விசாரணைகள் வினாக்களுக்காக மட்டும் பயன்படுவதால் எதுவித பிரயோசனமும் தரப்போவதில்லை. இனி இப்படி நிகழாமல் தடுக்க ஏதேனும் முடிவுசெய்ய அவை பயன்படவேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இவ்வித கலவரங்கள் ஒருவேடிக்கையாகப் போய்விட்டது.

ரயிலில் பட்டப்பகலில் கொள்ளையடிப்பவர்களுக்கு இவை நல்லதொரு சாட்டாகப் போய்விடுகிறது.

நாம் வெளிநாடுகளில் வாங்கும் பெட்ரோல்; காரை ஓட வைப்பதைவிட கடைகளை எரிக்கப் பயன்படுவது அதிகம் போலத் தெரிகிறது.

"புகழ் மண்டிக் கிடக்குது தமிழ்நாடு" என்றான் பாரதி. எங்கள் யாழ்ப்பாணம் இப்போது தீயின் புகை மண்டிக் கிடக்கிறது. ஒளி மழுந்து இருள் கவ்விக்கிடக்கிறது.

வகுப்புக்கலவரம் என்று சிலர் நடத்தும் வேடிக்கையை இனியாவது கட்டுப்படுத்த நமது தலைவர்கள் கூட்டாக முன்வரவேண்டும். இல்லாவிட்டில் அப்பாவிகளின் கண்ணீர் வரட்சிப் பிரதேசங்களின் ஆறாக ஓடிக்கொண்டிருக்கும்.

யார் குற்றவாளி என்று தேடிக்கொண்டிருப்பதைவிட அடுத்த குற்றத்தை தடுப்பதில் நமது கவனம் இன்னும் தீவிரமாக இருக்கவேண்டும்.

க. கணேசலிங்கம்
யாழ்ப்பாணம்.

நூல் வெளியீடு

(சுழிபுரம்)

அபிராமியந்தாதி ஆய்வுரை முதலாவது பாட்டுக்குரிய நூல் வெளியீடு வழக்கம்பரை அம்மன் கோவில் தேர்த்திருவிழாவான செவ்வாய்க்கிழமை முற்பகல் வெளியிடப்படவுள்ளது. வழக்கம்பரை சனசமூக நிலையத்தினரே இந்நூலை வெளியிடுகின்றனர். இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு திரு மு. தம்பையா தலைமை வகிப்பார். பண்டிதர் பொன்னம்பலவாணர் நூலை வெளியிட்டுவைப்பார். நூலின் முதல் பிரதியை வைத்திய கலாநிதி ச. சண்முகநாதன் பெற்றுக்கொள்வார்.

இந்த வலையால் மீன்பிடிக்கத் தடை

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள குளங்களில் 3 அங்குலத்திற்கு குறைவான 'கண்' உள்ள வலைகளைப் பாவித்து மீன்பிடிப்பது தடைசெய்யப்பட்டிருக்கிறது.

இத்தடை உத்தரவை மீறிக் குளங்களில் மீன்பிடிப்போர் மீது கடற்றொழில் சட்டத்தின்கீழ் சட்டநடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. (கு)

ஈராக் அணு ஆலைதாக்குதல் எதிரொலி

இஸ்ரேலுக்கு விமானவிற்பனை அமெரிக்கா இடைநிறுத்தம்

வாஷிங்டன் ஜூன், 12

ஈராக்கிய அணு உற்பத்தி நிலையத்தை இஸ்ரேலிய விமானங்கள் நாசமாக்கியதை அடுத்து இஸ்ரேலுக்கு அமெரிக்கா மேற்கொள்ள இருந்த "நவீன எப்-16" போர் விமான விற்பனையை ஜனாதிபதி திரு. றேகன் இடைநிறுத்தி உள்ளார்.

ஈராக்கிய அணு உற்பத்தி நிலையத்தைத் தாக்கியதன் மூலம் அமெரிக்க இஸ்ரேல் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறியுள்ளது என்று அமெரிக்க வெளிநாட்டமைச்சர் டக்டர் அலெக்சாண்டர் ஹெய்க் தெரிவித்துள்ளார்.

ஐ நா பாதுகாப்புச்சபை நாளை கூடுகிறது

இதேசமயம் இஸ்ரேலின் செயல் குறித்து ஆராய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை நாளை கூடுகிறது (இ)

இந்திய முதல் தகவல் தொடர்பு விண்கலம்

புதுடில்லி, ஜூன் 12

இந்தியாவின் முதலாவது தகவல் தொடர்பு செயற்கைக்கோள் அடுத்த மாதம் 19ந் திகதி சோதனைரீதியில் விண்வெளிக்கு அனுப்பப்படவுள்ளது. (இ)

"பொலிசார் சட்டத்தை மீறினால் கடும் நடவடிக்கை"

யாழ் பொலிஸ் அதிபர் எச்சரிக்கை

(மாவிட்டபுரம்)

பொலிஸார் பொதுமக்களின் பாதுகாவலர்களாக இருக்கவேண்டுமே தவிர எதிரிகளாக மாறக்கூடாது. பொலிசாருக்கும் பொதுமக்களுக்கிடையே இடைவெளியை ஏற்படுத்தக்கூடிய சம்பவங்களுக்கு இடம் கொடாது இரு குழுவினருக்குமிடையில் நட்புறவும், நல்லெண்ணமும் வளரச் செய்யவேண்டும்."

இவ்வாறு காங்கேசந்துறை பொலிஸ் நிலையத்திற்கு விஜயம் செய்த யாழ் பொலிஸ் அதிபர் திரு மஹேந்திரன் பொலிஸார் மத்தியில் பேசுகையில் கூறினார்.

பொலிஸ் நிலைய ஒழுங்குமுறைகளைப் பார்வையிட்டபின் பொலிஸாருக்கு வகுப்பு நடத்தி அங்கு பேசுகையில் திரு மஹேந்திரன் மேலும் கூறியதாவது:-

"பொலிசார் தமது கடமையை உணர்ந்துசெயல்படவேண்டும். குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் நிறுத்தி அவர்களுக்குத் தண்டனை கிடைக்கச் செய்வதே எமது கடமையாக இருக்கவேண்டும். அதை விடுத்து குற்றவாளிகளுக்குத் தண்டனை கொடுக்கவோ, பொதுமக்களுக்கு அநீதி இழைக்கவோ எமக்கு அதிகாரமில்லை.

"சட்டத்தை மீறும் பொலிசார் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்." (கு

விசேஷ பயிற்சிக்கு டென்மார்க் சென்றார்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் அமைச்சுக் காரியாலயத்துக் கடலரிப்புத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொறியியலாளர் திரு செ. மகேஸ்வரன் டென்மார்க் ஆராய்ச்சி நிலையத்தில் விசேஷ பயிற்சி பெறுவதற்காக அரசாங்கத்தால் தெரிவுசெய்யப்பட்டு உபகாரச் சம்பளம் பெற்றுச் சென்றுள்ளார்;

பொறியியல் பட்டதாரியான இவர் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்வி கற்று விசேட சித்தி பெற்றுப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்.

இவர், யாழ்ப்பாணம் தொல்பொருள் ஆய்வாளர் திரு. ம. செல்வரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வராவர்.

பரி. யோவான் பரிசளிப்பு விழா

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இம்மாதம் 19ந் திகதி வெள்ளிக்கிழமை பீற்றர் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

கல்லூரி முகாமையாளரும் யாழ்ப்பாண ஆர்ச் டீக்கனுமான அருட் திரு சாம். டி. ஹொரிங்டன் அடிகளார் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கல்லூரி அதிபர் திரு. செ. ஏ. ஆனந்தராஜன் கல்லூரியின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுவார்.

சுகாதார அத்தியட்சகர் வைத்திய கலாநிதி எச். ஏ. யேசுதாசன் பரிசளிப்பு விழா உரையை நிகழ்த்துவார். வைத்திய கலாநிதி திருமதி கமலா யேசுதாசன் பரிசில்கள் வழங்குவார்கள்.

சதுரங்கப் போட்டி

(அரியாலை)

வடமாகாண சதுரங்கச் சுற்றுப்போட்டி நாளை முதல் மூன்றுநாட்களுக்கு யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இச்சுற்றுப்போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி, யாழ் பரியோவான் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆகிய கல்லூரிக் கோஷ்டிகள் கலந்துகொள்ளவிருக்கின்றன.

அகில இலங்கைக் கல்லூரிகளுக்கிடையிலான சதுரங்க இறுதிப்போட்டி கொழும்பு றோயல் கல்லூரியில் இம்மாதம் 25ந் திகதி தொடக்கம் 4 நாட்கள் நடைபெறவிருக்கின்றது.

மட்டு பல்கலைக்கழக கல்லூரி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி ஆவணி மாதம் ஆரம்பமாகவிருக்கிறது.

இதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கு முகமாக பல்கலைக்கழக மானியக் குழுத் தலைவரான பேராசிரியர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே தலைமையிலான குழு நாளை சனிக்கிழமை வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்துக்கு விஜயம் செய்யவிருக்கிறது. (து)

மன்னாரில் குதிரைகளுக்கு மவுசு

(மன்னார்)

மன்னார்ப் பகுதியில் குதிரைகளின் மதிப்பு அதிகரித்து வருகிறது.

வெளியூர்களிலிருந்து வருவோர் அதிக பணம் செலுத்தி குதிரைகளை வாங்கிச் செல்கின்றனர். இதனால் குதிரைகளின் மதிப்பு அதிகரித்துள்ளது.

ஹரன் - யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
Shaft's Big Score
Color
Adults Only

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
மரகதம்
(புதிய பிரதி)

வெஸ்லி
தினசரி 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
கல்யாண ராமன்

வெலிங்டன்
தினசரி 10-30, 2-30 6-00
ரஜனிகாந்த் - லதா
ஆயிரம் ஜென்மங்கள்

லிடோ யாழ் நகர்
தினசரி 10-30 2-30
அழியாத கோலங்கள்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00
★ சிவாஜி ★ ஜெய்சங்கர் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

சாந்தி (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி விஜயா-மேஜர்-பாலாஜி-தேங்காய்
தர்மராஜா
யப்பானில் படமாக்கப்பட்ட, கராட்டிச்சண்டைக் காட்சிகள் நிறைந்த வண்ணப் படம்!

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10-30, 3-30 இன்றுமுதல் 6-00
★ ரஜனி காந்த் ★ ஷோபா
★ ஸ்ரீபிரியா ★ சுமன்
★ சௌகார் ஜானகி நடித்த
தீ

மனோகரா தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - லதா - ராதாசலுஜா நடித்த
இதயக்கனி

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, 2-30, 6-00
சிவாஜி கணேசன் - கே. ஆர். விஜயா
ரிஷிமூலம்

ராஜா யாழ்ப்பாணம் சில தினங்கள் மட்டும்
தினசரி காலை 10-30, 2-30, 6-00
● பாக்யராஜ் ● ரதி ● [illegible]
புதிய வார்ப்புகள்
வயது வந்தவர்களுக்கு உகந்தது

யாழ். சம்பவங்கள் பற்றி

மலேசிய பத்திரிகை வெளியிட்ட செய்தி

[மலேசியாவில் வெளியிடப்படும் 'நியூஸ்ட்ரெயிட் டைம்ஸ்' என்ற பத்திரிகை ஜூன் 2ம் திகதி இலங்கை சம்பவங்கள் தொடர்பாக வெளியிட்டிருந்த செய்தியொன்றை கீழே தருகின்றோம்]

கொழும்பு, செவ்.

இருதினங்கள் நடைபெற்ற வன்செயல்கள் தீவைப்புக்களைத்தொடர்ந்து இலங்கை அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தியிருக்கின்றது. இலங்கையின் வடபாகத்தில் உள்ள ஒரு மாகாணத் தலைநகரான யாழ்ப்பாணத்தை இச்சம்பவங்கள் ஆட்டிப்படைத்துள்ளன.

ஞாயிற்றுக்கிழமை எதிர்க்கட்சியினரின் கூட்டமொன்றில் காவல்புரிந்த பொலிஸ்காரர் ஒருவர் கொல்லப்பட்டதையடுத்து இச் சம்பவங்கள் ஆரம்பித்தன.

இங்கு கிடைத்துவரும் செய்திகளின்படி இன்றும்கூட ஆயுதப்படைகள் இருந்த போதிலும் அங்கு வன்செயல்கள் நடைபெறுகின்றன. யாழ்ப்பாணம் மேயர் கொல்லப்பட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. இன்னொரு செய்தியின்படி பொலிசார் யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்குத் தீயிட்டு அட்டகாசம்புரியத் தொடங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்படும் தமிழ் தினசரி ஒன்றின் காரியாலயம் தீயிட்டுக் கொளுத்தி நாசப்படுத்தப்பட்டுள்ளது. நகரில் சந்தையின் ஒருபகுதியும் எரிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் வேலைநிறுத்தம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்தனர். பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. வியாபார ஸ்தலங்களும், வங்கிகளும் இழுத்து மூடப்பட்டன. அரசாங்க அலுவலகங்கள் மூடப்பட்டன, போக்குவரத்துச்சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன. முகாம்களில் தங்கியிருக்கவேண்டிய பொலிசார் இரவுநேரத்தைப் பயன்படுத்திக்கொண்டுமுகாம்களிலிருந்து வெளியேறி தமது சகாவின் கொலைக்காகப் பழிவாங்கும் நோக்கோடு அட்டகாசங்கள் புரிந்ததாகச் செய்திகள் கூறின.

அவசரகாலத்தின் கீழ்யாழ்ப்பாணம் பற்றிய செய்திகள் தணிக்கைசெய்யப்படுகின்றன.

பிரதமர் மட்டுநகர் விஜயம்

[மட்டக்களப்பு

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இன்று சனிக்கிழமை காலை மட்டக்களப்பு வருகிறார்.

இராசதுரை மாதிரிக் கிராமம், மகிளூர்முனை மாதிரிக் கிராமம் ஆகிய மாதிரிக் கிராம திறப்பு விழாக்களில் கலந்து கொள்ளவிருக்கும் பிரதமர், வேறு பல நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார். [து]

மட்டு. அபிவிருத்தி சபை:

இரண்டாமிடத்தை மாற்ற கூட்டணியிடம் கோரிக்கை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி கைப்பற்றிய இரண்டாவது இடத்தை பட்டியலில் மூன்றாவதாக இடம்பெற்றிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த திரு. கு. சௌந்தராஜனுக்கு பெற்றுக்கொடுப்பதில் மட்டக்களப்புத் தொகுதி கூட்டணி பிரமுகர்களும் இளைஞர்களும் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு மட்டக்களப்புத்தொகுதியில்தான் அதிக வாக்குகள் கிடைத்தது.

மட்டக்களப் மாவட்டத்திலுள்ள மூன்று தொகுதிகளில் கூட்டணிக்கு பட்டிருப்பில் எம்.பி.திரு.பூ.கணேசலிங்கம், கற்குடாவில் சபைத் தலைவர் திரு, சி. சம்பந்தமூர்த்தி ஆகியோர் இருக்கின்றனர். மட்டக்களப்புக்கு பா. உறுப்பினரும் இல்லை. அபிவிருத்தி சபை உறுப்பினரும் இல்லை. இந்நிலையை நீக்கி பட்டிருப்புத் தொகுதியிலிருந்து அபிவிருத்தி சபைக்கு தெரிவான அல்பேட் சிவரெத்தினத்துக்குரிய இடத்தை மட்டக்களப்புத் தொகுதியைச் சேர்ந்தவரான திரு. கு. சௌந்தரராஜனுக்கு வழங்குவதே முறையென்று இப்பகுதி கூட்டணி பிரமுகர்களும், இளைஞர்களும் தலைமைப்பீடத்தை வேண்டியுள்ளதாகதெரியவந்துள்ளது.

மின்சார நிலைமை முன்னேற்றம்

12 தொழிற்சாலைகள் மீண்டும் இயங்குகின்றன

[கொழும்பு]

மின் உற்பத்தி நிலைமையில் முன்னேற்றம்காணப்பட்டமை அடுத்து 12 அரசுத்துறை தொழிற்சாலைகளை மீண்டும் இயங்க அனுமதிப்பதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதனையடுத்து இத்தொழிற்சாலைகள் சென்ற 10-ம் திகதி முதல் இயங்க ஆரம்பித்தன.

மௌசாகலை, காசல்ரீ பிரதேசங்களில் மழைபெய்ததை அடுத்து மௌசாகலை நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் 2 1/2 அடியும், காசல்ரீ நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் 1 1/2 அடியும் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிலைமை இவ்வாறிருந்த போதிலும் மின் வெட்டு நாளாந்தம்எட்டுமணித்தியாலமாகவே இருக்கும் என்று மின்சாரசபை அதிகாரி ஒருவர் கூறினர். [இ]

சங்கானை ப. நோ. கூ. ச.

தடை உத்தரவு நீக்கம்; ஜூன் 20ல் பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் சித்தன்கேணி கணேச வித்தியாசாலையில் இம்மாதம் 20-ந் திகதி காலை திரு. கே. சி. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

கடந்த வருடம் டிசம்பர் 8ம் தேதி நடைபெறவிருந்த வருடாந்த பொதுக் கூட்டம் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் தடை உத்தரவு காரணமாக நடைபெறவில்லை.

இத்தடை உத்தரவு கடந்த மாதம் 15ம் தேதி நீதிமன்றத்தினல் நீக்கப்பட்டதைதொடர்ந்து இம்மாதம் 20ம் தேதி வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறவிருக்கிறது. [க]

சங்கிலி அபேஸ்

[கோண்டாவில்]

வீட்டு முற்றம் கூட்டிக்கொண்டு நின்ற வயோதிப மாதின் சுமார் ஆறாயிரம் ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலி அறுக்கப்பட்டது.

இச்சம்பவம் நாச்சிமார் கோவிலுக்கு முன்பாக நிகழ்ந்துள்ளது.

சங்கிலியை அறுத்த நபர் வில்லுக்கத்தியையும் சைக்கிளையும் விட்டு ஓடிவிட்டதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ். மறை மாவட்டம் வாழ்த்து

[உடுப்பிட்டி]

யாழ். மறை மாவட்ட முன்னாள் மறைக் கல்வி இயக்குநரும், மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கப் பரிபாலகருமான அதி. வண. பிதா. தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் மன்னார் மேற்றிராணியாராக புனித பாப்பரசர் 2-ம் அருள் சின்னப்பரால் தெரிவு செய்யப்பட்டதையிட்டு அன்னாருக்கு யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் பாராட்டும் வாழ்த்துக்களும் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாகத் தற்போது றோமாபுரி ஊர்பான் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கும் அருட்திரு சௌந்தரநாயகம் அடிகளாருக்குத் தந்தி ஒன்றையும் மேற்படி கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் அனுப்பி வைத்துள்ளது.

ஆங்கில தினவிழா

[உடுப்பிட்டி]

கரவெட்டி திருஇருதயக்கல்லூரியில் வருடாந்தம் கொண்டாடப்படும் ஆங்கிலதினவிழா இம்மாதம் 25ம் திகதி நடைபெறவுள்ளதாக கல்லூரி அதிபர் திரு. தோமஸ் ஈப்பன் தெரிவித்தார். [அ]

இப்படியும் நடக்கிறது

யாழ். மாநகர சபையைக் கடந்து முனியப்பர் வீதி வழியாக ஒரு ராணுவ 'ஜீப்' மெதுவாகப் போய்க்கொண்டிருந்தது.

இடது பக்கத்தில் முகாமிட்டிருந்தவர்களில் சிலர் ராணுவ ஜீப்பை நோக்கி 'ஹூய்' என்று கூச்சலிட்டார்கள்.

என்ன நடந்தது?

பெரியார் செல்வநாயகம் நினைவு ஸ்தூபிக்கு அருகில் முகாமிட்டிருந்தவர்களில் இருவர் சிக்கிக்கொண்டனர். இராணுவத்தினரிடமிருந்து 'செம்மை'யாக வாங்கிக்கொண்டனர். எந்தவித எதிர்ப்புமே தலை தூக்கவில்லையாம்!

⁂

யாழ். பிரதான வீதியிலுள்ள கபே ஒன்றுக்குள் சிவில் உடை அணிந்திருந்த சிலர் ஒரு நாள் காலை வேளை நுழைந்தனர்.

சுமார் ஐநூறு இடியப்பமும் கிழங்குக் கறியும் சாப்பிட்டனர்.

தொங்கவிடப்பட்ட வாழைக்குலையையும் காலியாக்கினர்!

'கபே' முதலாளி பணம் கேட்டார்.

அவர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா? ஒரு பெரிய அதிகாரியின் பெயரைக்கூறி; "அவரிடம் கேளுங்கள் அவர் பணம் கட்டுவார்" என்றார்களாம். முதலாளி அசந்து போய்விட்டார்!

⁂

திடீரென சேவைக்கு அழைக்கப்பட்ட அவர்கள்; யாழ் நகரின் மத்தியிலுள்ள முன்னணிக் கல்லூரியில் தங்குவதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. இருந்தார்கள். சென்றார்கள்.

என்ன விசேஷம்என்றால்; கல்லூரிநூல்நிலையத்திலிருந்து சில ஆங்கிலப் புத்தகங்களும், ஸ்ரேப்லிங் மெஷின், நம்பரிங் மெஷின் ஆகியவைகளும் மாயமாக மறைந்து விட்டவாம். எப்படியோ ஆங்கில தட்டச்சு இயந்திரம் மட்டும் தப்பிவிட்டதாம். எப்படி சங்கதி?

★

— ஊடுருவி

யாழ்ப்பாண சம்பவம்:

தூதரகங்களுக்கு 'அமிர்' அறிக்கை அனுப்பினர்

[கொழும்பு]

வடபகுதித் தமிழ் மக்களின் உடைமைகளுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் மற்றும் உயிரிழப்புகள் குறித்து எதிர்க்கட்சித்தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான திரு. அ. அமிர்தலிங்கம் இலங்கையிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அறிக்கைகளை அனுப்பி வைத்துள்ளார். [து]

பரிவர்த்தனை நிலையம்

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியிலுள்ள புங்குடுதீவில் தன்னியக்கத் தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் ஒன்று தபால் தந்தித் திணைக்களத்தால் நிறுவப்பட்டுள்ளது. புங்குடுதீவு மகாவித்தியாலயத்துக்கு அருகில் அமைந்துள்ள இந்நிலையம் விரைவில் இயங்கத் தொடங்குமென எதிர்பாக்ககப்படுகிறது, [இ]

V. R. V.
போக்குவரத்துச் சேவை
அறிவித்தல்

மீண்டும் யாழ் - திருமலை - யாழ்
பஸ் சேவை ஆரம்பம்

தவிர்க்க முடியாத காரணங்களினல்
கடந்த ஒருவார காலமாக தற்காலிகமாக
நிறுத்தி வைக்கப்பட்ட
V. R. V. போக்குவரத்துச் சேவை
மீண்டும் ஆரம்பமாகின்றது என்பதனை மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கிறோம்.
பிரயாணிகளுக்கு ஏற்பட்ட
அசௌகரியங்களுக்காக வருந்துகின்றோம்.
ஆசனங்களைப் பதிவு செய்யும் இடம்:
யாழ்: 1. றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் ஹவுஸ்
போன்: 464, 7889
2. V. R. V. ரான்ஸ்போட்
சேகரம் கட்டிடம், கொட்டடி. போன்: 8162
திருமலை: நெஸ் கபே
401, டொக்யாட் வீதி, திருகோணமலை.
போன்: 482
பிரயாணிகள் ஒவ்வொருவரும் தனித்தனியாக ரூ 50,000
காப்புறுதிசெய்யப்பட்ட சேவை! சொகுசான சேவை.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியிலுள்ள 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலையம் அச்சகத்தில்
1981ம் ஆண்டு ஜூன் மாதம் 13-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered sa News Paper at the General Post Office, Sri Lan
nnrdNo. QB 100236/81 P. O. Box 49, Jaffna. தற்காலிக தொலைபேசி: 7707